# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் : 11 | தமிழ் இலக்கிய நயம் I,II | நேரம்: 3.00மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : ........................................................................ | | 48 T I,II |

பகுதி I இல் 1, 2ஆம் வினாக்களுக்கும் பகுதி II இல் 3ஆம் வினாவுக்கும் பகுதி III இல் எவையேனும் இரண்டு வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.

### பகுதி - I

**(01) i தொடக்கம் v வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

(i) "திங்கள் மாலை வெண்குடையான்".

அ) இத் தொடராற் குறிக்கப்படும் மன்னன் யார்?

ஆ) இப் பாடலடி இடம்பெறும் இலக்கியத்தை இயற்றியவர் யார்?

(ii) "சிறகொடிந்த பறவை பாறை இடுக்குகளில் உறைந்து உயிரைப் பத்திரப்படுத்துவதைப் போல் கிழவியின் கடிதத்தையும் தீர்க்கமான நெஞ்சையும் கெட்டியாக இறுக்கிக் கொண்டேன்".

அ) இக்கூற்று யாருடைய சிந்தனையில் எழுந்தது?

ஆ) இங்கு இடம்பெறும் அணி யாது?

(iii) "எங்கள் வீட்டுச் சேவலுக்கும் பேட்டுக்கும் எப்போது சண்டை ஆரம்பித்தது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் அவதானித்த நாளிலிருந்து அவை ஒன்றையொன்று உர் என்று முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டிருந்தன".

அ) சேவல், பேடு என்ற சொற்களின் மூலம் குறிப்பாகச் சுட்டப்படுவோர் யாவர்?

ஆ) "உர் என்று முகத்தைத் திருப்பி" என்ற தொடர் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சி எது?

(iv) "கடைசி வரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க".

அ) அப்பாவின் மனசுக்குள் இருந்த தூர் எது?

ஆ) தூர் என்ற சொல்லின் பொருள் என்ன?

(v) "சொன்ன எல்லை ஊங்கினும் தூங்கினான்
மன்னன் வந்திலன்".

அ) சொன்ன எல்லை எது?

ஆ) மன்னன் என்று சுட்டப்படுபவன் யார்?

(5X4 = 20 புள்ளிகள்)

agaram.lk

**(02) கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

காலையிலே பனி காயுமுன்னர் குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம் - தொழிற்
காலையிலே சங்கு ஊதுமுன்னே பசுந்
தங்கத் தளிரினைக் கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் கிறுகிறுக் ஓசையிலே- நெஞ்ச
மேடையிலே சதிராடுமெண்ணங்களின்
வேதனை துன்ப ஒலி கேட்கும்

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்.

agaram.lk

(i) மலையகத் தோட்டத் தொழிலாளரின் துயர வாழ்க்கை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(ii) 'அடிமைத் தளையிலிருந்து விடுபடுவோம்' என்ற அவர்களின் நம்பிக்கை உணர்வு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

(iii) தமது தொழிலைச் செய்வதில் தோட்டப் பெண்கள் காட்டும் அதீத ஆர்வம் எந்தத் தொடர்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது?

(iv) இப் பாடல்களில் இடம்பெற்ற எவையேனும் இரண்டு உவமை அணிகளை எடுத்துக்காட்டி விளக்குக?

(v) "நெஞ்சமேடையிலே சதிராடு மெண்ணங்களின் வேதனை துன்ப ஒலி கேட்கும்" இத் தொடரில் நீர் காணும் நயத்தை விவரிக்குக.

(5x5 = 25 புள்ளிகள்)

## பகுதி - II

**(3) கீழ்க்காணும் உரைப்பகுதியினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன் மூலம் இரண்டு பயன்கள் கிட்டுகின்றன. முதலாவது யாரை வெறுக்கிறோமோ அவர் மேல் போர் தொடுத்து வெற்றி காணமுடிகிறது. இரண்டாவது அவ்வாறு பெறும் வெற்றியைப் பிறர் புகழவும் காரணமாகிறது.

இவ்வாறு இரண்டு வழிகளிற் பயன் பெறக்கூடுமாதலின் வன்மை மிக்க அரசர்கள் "போர்" என்ற வழியியை மேற்கொண்டதில் வியப்பிருத்தல் இயலாது. மேலும் அந்த அரசர்கள் புரியும் இந்தப் போர்களை தம்முடைய நாட்டு மக்களின் நலத்திற்காகவே செய்ததாகவும் கூறினர். அம் மக்களும் இதனை நம்பினர்.

பிறருடைய நாட்டின் மேல் போர் தொடுத்துச் செல்லுதல் அரசர்க்குரிய அறமாகவும் போற்றிக் கூறப்பெற்றது.

தற்காப்புச் செய்ம்முறையில் போரிடுதல் அன்றியும் பிறர் மேல் படை கொண்டு வலுப்போருக்குப் போதலும் அறமெனக் கருதப்பட்டது. புகழ் வேட்டையாடப் பிறருடைய நிலத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் போரிடுதலை ஒரு வாய்ப்பாகக் கொண்டனர் அற்றை நாள் தமிழர்.

i) வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?

ii) மன்னர்கள் நடத்திய போர்களை மக்கள் எதிர்க்காமைக்குரிய காரணம் யாதெனக் கருதமுடியும்?

iii) அரசர்க்குரிய அறங்களாகக் கருதப்பட்டவை எவை?

iv) அற்றை நாள் தமிழர் பற்றிய ஆசிரியரின் மனப்பதிவு என்ன?

v) வலுப்போருக்குப் போதல், புகழ், வேட்டையாடல் என்னும் தொடர்களை விளக்குக?

(25 புள்ளிகள்)

## பகுதி - III

(04) **கானல் வரி** என்னும் பாடப்பகுதியில்

அ) சோழமன்னனின் பெருமைகள்

ஆ) காவிரி ஆற்றின் சிறப்பு

என்பன வர்ணிக்கப்படுமாற்றினை விளக்குக?

(15 புள்ளிகள்)

agaram.lk

(05) **உரிமையும் கடமையும்** என்னும் கட்டுரையில்

உரிமை, கடமை, அன்பு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(06) **வஞ்சியர் காண்டம்** நாடகத்தில்

அ) கண்ணகி

ஆ) காவற் பெண்டு

ஆகியோரின் குணப்பண்புகள் சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக?

(15 புள்ளிகள்)

(07) **மின்மினிகளால் ஒரு தோரணம்** என்னும் கட்டுரையின் அடிப்படையில்

“எளிமையான சின்னச் சொற்களுக்குள் மிகவும் பெரியதான அர்த்தப்பாடுகளைக் கிளர்த்தி விடுகிற ஆற்றல் ஹைக்கூவுக்கு உண்டு” என்னும் கூற்றை நான்கு ஹைக்கூக் கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

agaram.lk